இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 21-06-2025

# அமர்நாத் இராமகிருஷ்ணனின் அறிவும் அஞ்சாமையும்!



**அமர்நாத் இராமகிருஷ்ணன் என்ற தொல்லியல் துறை ஆய்வாளருக்குத் தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது. அவரது அறிவும், அஞ்சாமையும்தான் தமிழினத்தின் பெருமையை நிலை நிறுத்தி இருக்கிறது.**

**அவரது துறையில் எத்தனையோ அறிஞர்கள் இருப்பார்கள். அவர்கள் பல கண்டுபிடிப்புகளைச் செய்திருப்பார்கள். ஆனால், தனது கண்டுபிடிப்புக்காக ஒன்றிய அரசால் இத்தனை முறை பணியிட மாற்ற பழிவாங்கல்களைச் சந்தித்து, தான் கொடுத்த அறிக்கையில் உறுதியாய் இருந்து தனது அஞ்சாமையை நிலைநிறுத்தி வருபவர் அமர்நாத் இராமகிருஷ்ணன் அவர்கள்.**

கீழடி அருகில் 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஒன்றிய அரசின் சார்பில் ஆய்வு நடத்தப்பட்டது. தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் இராமகிருஷ்ணன் இந்த ஆய்வுகளைச் செய்தார். 2017 ஆம் ஆண்டு இவரை அசாம் மாநிலத்துக்கு மாற்றிவிட்டு, ஸ்ரீராமன் என்பவரை கீழடிக்கு பொறுப்பாளராக நியமித்தார்கள். ஆய்வு செய்தவர்தான் ஆய்வு அறிக்கையை எழுத வேண்டும். ஆனால் அமர்நாத் இராமகிருஷ்ணனை ஆய்வு அறிக்கை எழுத விடாமல் ஒன்றிய அரசு தடுத்தது. அதன் பிறகு இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு அவர் தனது அறிக்கையைத் தாக்கல் செய்தார். இந்த அறிக்கையை இரண்டு ஆண்டுகள் கழித்து, ஏற்க முடியாது என்று சொல்லி இருக்கிறது பா.ஜ.க. அரசு.

“நான் அனுப்பியுள்ள அறிக்கை, தகுதி அறிதலுக்கு (vetting) உட்படுத்தப்படும் என நாடாளுமன்றத்தில் கூறப்பட்டது. இந்த வழக்கம் இதற்கு முன் இருந்ததில்லை. அறிக்கை குறித்து யாரும் விமர்சனம் செய்யலாம். அதைப் பற்றித் தெரியாத இன்னொருவர் தகுதி அறிதல் செய்ய முடியாது. அயோத்தியா அகழாய்வுகளைப் பார்த்துவரச் சொன்னால் என்னால் செய்ய முடியாது. காரணம், அங்கு நான் ஆய்வு செய்ததில்லை. தென்னிந்தியாவில் ஆய்வு செய்தவர்கள்தான் கீழடி ஆய்வறிக்கையைப் படிக்க முடியும். இல்லையெனில், தவறாகத்தான் முடிவெடுக்கப்படும். என்னுடைய கடமையை முடித்துவிட்டேன். அறிவியல்முறைப்படி அடையப்பட்ட முடிவை மாற்ற யாருக்கும் உரிமை இல்லை” என்று துணிச்சலாகச் சொன்னவர் அமர்நாத்.

அமர்நாத் இராமகிருஷ்ணனை மாற்றிய பிறகு வேறு ஒருவரை வைத்து கீழடி ஆய்வுகளைத் தொடர்ந்ததா பா.ஜ.க. அரசு என்றால் இல்லை. மூன்றாம் கட்ட ஆய்வுப் பணிக்கான உத்தரவை பா.ஜ.க. அரசு கொடுக்கவில்லை. எனவே தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறைதான் கீழடி ஆய்வைத் தொடர்ந்தது.

கீழடியில் இருந்து அனுப்பப்பட்ட அமர்நாத்தை நிம்மதியாக வேறு ஒரு இடத்தில் பணியாற்றவிட்டார்களா என்றால் அதுவும் இல்லை. கவுகாத்தியில் இருந்த அமர்நாத் இராமகிருஷ்ணன், கோவாவுக்கு மாற்றப்பட்டார். சென்னைக்கு வந்தார். பின்னர் டெல்லிக்கு மாற்றப்பட்டார்.

இப்போது நொய்டாவுக்கு மாற்றி இருக்கிறார்கள். அவர் செய்த குற்றம் என்பது, கீழடியின் பெருமையை நிறுவியதுதான். தமிழர்களின் பண்பாட்டை நிறுவியதுதான் அவர் செய்த ‘பாவம்’.

**கீழடி அகழாய்வு தொடர்பான ஆய்வறிக்கையை 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமர்நாத் இராமகிருஷ்ணன் தாக்கல் செய்தார். கீழடியில் மூன்று பண்பாட்டு காலகட்டங்கள் நிலவியிருக்க வேண்டும் என்பதை அதில் உறுதி செய்தார்.**

**★ முதலாவது காலகட்டம் கி.மு. எட்டாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுவரை நிலவியிருக்க வேண்டும். இந்த காலகட்டத்தில் கட்டுமானங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கீழடி இரும்புக் காலத்தில் வளரத் தொடங்கியிருக்கலாம் என்ற முடிவுக்கு வர முடியும்.**

**★ இரண்டாவது காலகட்டம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. முதலாம் நூற்றாண்டின் முடிவுவரை இருந்திருக்கலாம். செங்கல் கட்டுமானங்கள் இந்த காலகட்டத்தில் இருந்துள்ளது. கீழடியில் நகரப் பண்பாடு இருந்ததை இதன் மூலம் உணரலாம்.**

**★ மூன்றாவது காலகட்டம் கி.மு. ஒன்றாம் நூற்றாண்டின் முடிவிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டையும் தாண்டிச் செல்கிறது. இந்தக் காலக்கட்டத்து காசுகள் கிடைத்துள்ளது.**

**- இவற்றை எல்லாம் வைத்து, கீழடியின் காலகட்டம் என்பது கி.மு. எட்டாம் நூற்றாண்டில் துவங்கி கி.பி. பத்தாம் நூற்றாண்டுவரை நீண்டிருக்கிறது என்று அமர்நாத் இராமகிருஷ்ணன் நிறுவியுள்ளார். கீழடியில் குதிரையின் எலும்புகள் கிடைத்திருக்கிறது. பட்டினப்பாலை பாட்டுக்கான ஆதாரம் இது. இவரது ஆய்வுகளில் மொத்தமாக 2,447 பானை ஓட்டு கிறுக்கல்கள் கிடைத்துள்ளன. பல தமிழ் பிராமி எழுத்துகளும் கிடைத்துள்ளன. இவை அனைத்தையும் வெளியில் எடுத்துக் கொண்டு வந்து நிறுவினார் அமர்நாத் இராமகிருஷ்ணன்.**

“நமது தேடலைக் கீழடியோடு மட்டும் நிறுத்திவிடக் கூடாது. வைகை ஆற்றங்கரையில் 293 ஆய்விடங்கள் உள்ளன. ஆய்வை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். எல்லை வகுக்கும்போது ஹரப்பாவும் மொகஞ்சதாரோவும் பாகிஸ்தானுக்குப் போய்விட்ட காரணத்தால்தான், சிந்துவெளி நாகரிகப் பகுதிகளைத் தேடி இந்தியாவுக்குள் நமது ஆய்வுகள் தொடர்ந்தன. தோலவிரா, காளிபங்கன், ரோபர், லோத்தல் போன்ற இடங்களைக் கண்டறிய முடிந்தது. மொகஞ்சதாரோவையும் குஜராத்தில் உள்ள தோலவிராவையும் ஒப்பிட முடிவது போல, கீழடி ஆய்விலும் சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறு ஒப்பிடும்போதுதான் கீழடியில் கண்டறியப்பட்ட நாகரிகம் எவ்வளவு பரந்து விரிந்திருந்தது எனத் தெரியும்” என்று சொல்கிறார் அமர்நாத். இதேபோல் வைகை நாகரிகத்தையும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அவர் சொல்கிறார்.

கடந்த எட்டு ஆண்டுகளாக கீழடிப் பெருமையை நிலைநாட்டப் போராடி வரும் அறிஞர் அமர்நாத் இராமகிருஷ்ணனை வாழ்த்துவோம்! பாராட்டுவோம்! பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் பணியாற்றி வரும் அவரைப் பாதுகாப்போம்!

## பொதுஇடங்களில் உள்ள காலனி சாதிப் பெயர்களை நீக்க வேண்டும்! தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஜூன் 21–

மாநிலம் முழுவதும் பொதுஇடங்களில் உள்ள காலனி மற்றும் சாதிப் பெயர்களை நீக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்து இடங்களிலும் உள்ள குடியிருப்புகள், சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள சாதி அடிப்படையிலான பெயர்கள் நீக்கப்படும் என கடந்த ஏப்ரல் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். முதலமைச்சரின் அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள் மற்றும் பொது இடங்களின் பெயரில் இருந்து சாதிப் பெயர்களை நீக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கும் நகராட்சி நிர்வாகத்துறை சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது. அதில், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள ஆயிரத்து 132 இடங்களில், “காலனி மற்றும் சாதிப் பெயர்களை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளதால், புதிய பெயர்கள் தொடர்பான கருத்துருவை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பூக்கள், மரங்கள், பொதுத்தலைவர்கள், வரலாறு, நிலம் மற்றும் இயற்கை அடிப்படையில் பெயர்களை தேர்வு செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஒளிமயமான இந்தியாவை நோக்கிய நமது பயணத்தில், வெற்றி நமதே!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஜூன் 21-**

**மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் பிறந்தநாள் நேற்று முன்தினம்!**

**இந்நாளில் ராகுல்காந்தி அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துச் செய்தி வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஒளிமயமான இந்தியாவை நோக்கிய நமது பயணத்தில் வெற்றி நமதே!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



எனது கருத்தியல் உடன் பிறப்பான ராகுல்காந்தி அவர்களுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகள் உதிரத்தால் அல்ல, சிந்தனை, தொலைநோக்கு மற்றும் நோக்கத்தால் பிணைக்கப்பட்டவர்கள் நாம்.

நீங்கள் தொடர்ந்து உறுதியாக நின்று துணிவுடன் வழிநடத்த வேண்டும். ஒளிமயமான இந்தியாவை நோக்கிய நமது பயணத்தில், வெற்றி நமதே.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ராகுல்காந்தி அவர்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

## கரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட

# வாக்குச்சாவடி முகவர்கள் - பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

கரூர், ஜூன் 21-

கரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. 40 விழுக்காடு புதிய வாக்காளர்களைச் சேர்ப்பது குறித்து அவர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 2683 பூத் கமிட்டி நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம், கரூர் பிரேம் மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தலைமை வகித்து பேசினார்.

அவர் பேசியதாவது:-

2021 ஆம் ஆண்டு கரூர் சட்டமன்ற தொகுதியில் 2.5 லட்சம் வாக்காளர்கள் இருந்த நிலையில் ஒரு லட்சம் வாக்காளர்கள் திமுகவுக்கு வாக்களித்துள்ளார்கள். ஒரு லட்சம் பேரையும் புதிதாக கழகத்தில் உறுப்பினராக சேர்த்து 40% புதிய வாக்காளர்களை சேர்த்து அவர்களுக்கு உறுப்பினர் அட்டை பெற்று தர வேண்டும். அந்த பணிகளை மேற்கொண்டு கடந்த சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தலில் பெற்ற வாக்குகளை விட கூடுதலாக 10% வாக்குகளை பெறுவதற்கு இலக்கு நிர்ணயித்து வாக்குச்சாவடி முகவர்கள், பாக முகவர்கள் பணியாற்ற வேண்டும். ஓர் அணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில், நமது நிர்வாகிகள் நாள் ஒன்றுக்கு வார்டு வாரியாக 15 வீடுகளுக்கு நேரில் சென்று உறுப்பினர் சேர்க்கை நடத்த வேண்டும்.

அரசின் சாதனைகளையும் திராவிட மாடல் முதல்வரின் முன்னெடுப்புகளையும், மாநில உரிமைகளை நிலைநாட்ட சட்டப் போராட்டங்கள் நடத்தி வெற்றி பெற்றதையும், எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கையை தொடங்க வேண்டும். கழக நிர்வாகிகள் அவரவர் வாக்குச்சாவடியில் பொறுப்புகளை ஏற்று பூத் கமிட்டியோடு இணைந்து அதிக உறுப்பினர்களை சேர்த்தோம் என்ற சாதனையை நிகழ்த்த வேண்டும். தலைவர் இட்ட கட்டளையை சிறப்பாக செயல்படுத்த வேண்டும். முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் 234 தொகுதிகளிலும் அதிக உறுப்பினர்களை சேர்த்தது கரூர் தொகுதி என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். நண்பர்கள் உறவினர்களை உறுப்பினராக சேர்க்க நிர்வாகிகள் முன் வர வேண்டும்.

தி.மு.க. அரசின் சாதனைத் திட்டங்களை கரூர் தொகுதியில் பெறாத குடும்பங்களே இல்லை. விடியல் பயணத் திட்டத்தின் கீழ் பேருந்து பயணம், மகளிர் உரிமை தொகை, காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன், மக்களை தேடி மருத்துவம், இதயம் காப்போம், இப்படி ஏதாவது ஒரு திட்டத்தில் பயன் அடைந்து இருப்பார்கள். தமிழ் நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கும் தேர்தலாக வரும் சட்டமன்ற தேர்தல் என்பதை கருத்தில் கொண்டு 234 தொகுதிகளில் கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வென்றோம் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். 154 வாக்குச்சாவடிகளிலும் கழக அரசின் சாதனைகளை துண்டு பிரசுரங்களாக எடுத்துச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தினமும் காலை ஒரு மணி நேரம் இந்த பணியில் ஈடுபட வேண்டும்.

மேலும் கரூர் மாவட்டத்திற்கு இன்று தனியாக ரூ.3000 கோடி அளவில் வேளாண்மை கல்லூரி அரசு கலைக்கல்லூரி புதிய பேருந்து நிலையம், நெரூர் உன்னியூர் பாலம், புதிய சிப்காட் ஐடி பார்க். முருங்கை பூங்கா, சுற்று வட்ட சாலை, கரூர் காமராஜ் மார்க்கெட், வெங்கமேட்டில் மீன் மார்க்கெட், சுங்க கேட்டில் அரசு இசைக் கல்லூரிக்குச் சொந்த கட்டிடம், இப்படி பல்வேறு திட்டங்களை குறுகிய காலத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். 234 தொகுதிகளிலும் தமிழ்நாடு முதல்வரே சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றி நலத்திட்டங்களை வழங்கி உள்ளார்கள்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் சில சூழ்ச்சியால் நான் இல்லாத நிலையிலும் நான்கு தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெறச் செய்தீர்கள். யாரைப்பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியது இல்லை. நாம்தான் ஜெயிக்கிறோம். நாம் மட்டும் தான் ஜெயிக்கிறோம். எதிர்க்கட்சியாக இருந்த போதே 24 மணி நேரமும் நம்முடைய கட்சி அலுவலகம் திறந்து வைத்து மக்களுக்கு பணியாற்றினோம். அரிசி பருப்பு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் மட்டுமின்றி நாள்தோறும் உணவு என தொடர்ச்சியாக வழங்கினோம். ஆனால் எதிர் முகாமில் ஆளும் கட்சியாக இருந்த போதிலும் கொரோனா காலத்தில் 6 மாதமாக அலுவலகத்தை பூட்டி விட்டு சென்று விட்டார்கள்.

நான் கேட்கிறேன் இந்த4 ஆண்டுகளில், யாராவது கடந்த காலத்தில் பதவியில் இருந்தவர்களின் வீடுகளுக்கு சென்று, நான் கல்விக்காக பணம் வாங்கி வந்தேன். நான் மருத்துவச் செலவிற்காக பணம் வாங்கி வந்தேன் என கூறி இருக்கிறார்களா. யாராவது ஒருத்தருக்கு உதவி செய்துள்ளார்களா?. நாம் அப்படி இல்லை ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர் கட்சியாக இருந்தாலும், மக்களுக்கு உதவி செய்வதையே கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். எனது வாக்குச்சாவடியில் நான் பொறுப்பேற்று இந்த பணிகளை நிறைவேற்றுவேன். அதே போன்று நிர்வாகிகள் ஒவ்வொருவரும் அவரவர் வாக்குச்சாவடியில் இப்பணிகளை செய்ய பொறுப்பு எடுத்துக்கொண்டு நிர்வாகிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். கழகத்தின் மகத்தான வெற்றிக்கு அனைவரும் இணைந்து பாடுபடுவோம்.

இவ்வாறு வி.செந்தில் பாலாஜி பேசினார்.

எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், பி.ஆர். இளங்கோ, க. சிவகாம சுந்தரி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, மாநில நிர்வாகிகள் முனவர் ஜான். வே. பல்லவி ராஜா, வக்கீல் விஜயகுமார், மாவட்ட நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம்எஸ்கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிர மணி, பாரத், மாநகரச் செயலாளர் எஸ்பி.கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன் பகுதி கழக செயலாளர்கள் கரூர் கணேசன், க. சுப்பிரமணி யன், ஆர் எஸ்.ராஜா, ஜோதிபாசு, விஜிஎஸ் குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கோயம்பள்ளி பாஸ்கரன், பி.முத்துக்குமாரசாமி, விகே.வேலுச்சாமி, செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என். செல்வராஜ், மாநகர பகுதி ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் 13 மாவட்டங்களில் மழை!

சென்னை, ஜூன் 21-

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் இன்று (21.06.2025) ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதி களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி, தேனி, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தலைமைச் செயலகத்தில், சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல் மற்றும் சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை உயர்த்துதல் குறித்து கூட்டுறவு/பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் நேற்று முன்தினம் (19.06.2025) ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உழவர் நலத் துறை அரசு செயலாளர் / வேளாண்மை உற்பத்தி ஆணையர் வி. தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத் துறை இயக்குநர் டி. அன்பழகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதியாளர்/சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர் பி. பாலமுருகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதியாளர்/தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணைய பேலாண்மை இயக்குநர் திருமதி டி.ரமணிதேவி, தமிழ்நாடு சர்க்கரைக்கழக பொது மேலாளர் திருமதி வி. மாலதி மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.